**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 134/2022**

**வா.சா.1 – விஸ்வநாதன்**

**<u>13–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வா.சா.ஆ. 12ன் அசல் வழக்கு எண். 349/2011ன் பழைய வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.12ன் படி மேற்படி வழக்கு 1986ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் பழனிசாமிகவுண்டர் மேற்படி அ.வ. 349/2011ல் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அவ்வழக்கில் சொத்தை வாங்கியதாக சொல்லும் பார்வதி, உமாதேவி ஆகியோர்களின் கூற்றை ஏற்பதற்காக வா.சா.ஆ.12 ஐ தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாரிசு சான்றிதழுக்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.12ன் வழக்கு பற்றி இவ்வழக்கை தாக்கல் செய்தவதற்கு முன்பே தெரியும் என்றால் சரிதான்.

2. அவ்வழக்கில் என்னை நாச்சியப்ப கவுண்டரின் வாரிசு என்ற முறையில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்ற முறையில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் தரப்பினர்கள் அனைவரும் அ.வ. எண். 349/2011ல் தரப்பினராக இல்லை என்பதால் வா.சா.ஆ.12 ஏற்க்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கூடுதலாக தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலம் மற்றும் வா.சா.ஆ.12 இவ்வழக்கிற்கும், இவ்வழக்கின் வழக்குரை மற்றும் வாதுரைக்கும் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வழக்குரையில் சொல்லாத சங்கதிகலை பொறுத்து

சாட்சியம் மற்றும் வாதுரை அளிக்க இயலாது என்பதால் எனது சாட்சியம் ஏற்க்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.13 17:15:53 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.